இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 06.08.2026

# உதயநிதி ஏற்படுத்திய எழுச்சி!

“எப்போதும் எனக்கு அதிக விளம்பரம் தேடித் தருகிறவர்கள் எனது எதிரிகள் தான்” என்பார் தந்தை பெரியார். அப்படித் தான் நடந்து கொள்கிறார் முதலமைச்சர் விஜய். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதியை கைது செய்து முடக்க நினைத்ததன் மூலமாக ஒட்டுமொத்த திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களும் எழுச்சியும் மலர்ச்சியும் கொண்ட வீரர்களாக எழுந்து நிற்கிறார்கள். சமூக வலைத்தளங்களில் கட்சி சார்பற்றவர்களும் உதயநிதி மீதான நடவடிக்கையைக் கண்டித்து கொந்தளித்துப் பேசிவருகிறார்கள். முதலமைச்சர் விஜய், தனக்குத் தானே ‘சூனியம்’ வைத்துக் கொண்டார் என்பதே நேற்றைய நிகழ்வுகள்!

**முதலமைச்சராக விஜய் வந்தது முதல் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் அதலபாதாளத்துக்குச் சென்றுகொண்டிருக்கிறது. பாலியல் வன்கொடுமைகள் நடக்காத நாள் இல்லை. எங்கும் போதைப் பொருள் நடமாட்டம். கொலை, கொள்ளை, திருட்டு, அரிவாள் வெட்டு, பெட்ரோல் குண்டு வீச்சுகள் என சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. பல்வேறு குற்றச் சம்பவங்களில் த.வெ.க. நிர்வாகிகளே கைதாகி வருகிறார்கள். அமைச்சர்களே பல்வேறு சர்ச்சைகளில் சிக்கி வருகிறார்கள். இது எதையும் முதலமைச்சர் விஜய்யால் தடுக்க முடியவில்லை.**

தமிழ்நாட்டின் உரிமை சார்ந்த பிரச்சினைகளில் வாய்மூடிக் கிடக்கிறார். காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமையை மொத்தமாக தாரை வார்த்து விட்டார். மாதம் தோறும் வழங்க வேண்டிய நீரைக் கூட கர்நாடகம் தர மறுக்கிறது. அதைத் தட்டிக் கேட்க யோக்கியதை அற்ற முதலமைச்சராக அவர் இருக்கிறார். மேகதாது அணையைக் கட்டித் தீருவோம் என்பதில் கர்நாடகம் உறுதியாக இருக்கிறது. அதைத் தடுக்க முடியவில்லை. இத்தகைய கையறு நிலையில் இருக்கும் முதலமைச்சர் விஜய், தனது முகத்திரை கிழிந்து விட்டதை மறைக்க எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதியைக் கைது செய்து பிரச்சினையைத் திசை திருப்பப் பார்த்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் வீறுகொண்ட போராட்டத்தின் விளைவாக, ‘நாங்க அவரை கைது செய்யப் போவது இல்லை, பேசிட்டு விட்டுவிடுவோம்’ என்று மழுப்பல் பதிலை நீதிமன்றத்தில் சொன்னது விஜய் அரசு. அப்படிச் சொல்லும் சூழ்நிலையை உருவாக்கி வைத்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள்.

‘உங்களைக் கைது செய்திருக்கிறோம்’ என்று சொல்லிவிட்டு, ‘கைது செய்யப் போவதில்லை’ என்று நீதிமன்றத்தில் சொன்னதைப் போல ஏமாற்றுக் காரியம் இருக்க முடியுமா?

**‘12 மணி வரைக்கும் எந்த முடிவும் எடுக்க வேண்டாம்’ என்று சென்னை உயர்நீதிமன்றம் சொன்ன பிறகும், அதற்கு முன்னதாக சென்னையில் கைது செய்து தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றது ஏன்? முதலமைச்சர் விஜய் இதன் மூலமாக என்ன சொல்ல விரும்புகிறார்? ‘நீதிமன்றத்தை மீறியவன் நான்’ என்று நினைக்கிறாரா? நீதிமன்றங்கள் என்றால் என்னவென்றாவது அவருக்குத் தெரியுமா?**

முதலமைச்சர் விஜய்க்கு திராணி இருந்தால் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி தஞ்சாவூரில் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லட்டும்!

“எந்த மாதிரி அமைச்சர்கள் அமைந்திருக்கிறார்கள்? திருட்டு லாட்டரி விற்கிற ஒரு அமைச்சர், திருட்டு விசிடி விற்கிற ஒரு அமைச்சர், பிளாக்கில் டிக்கெட் விற்கிற ஒரு அமைச்சர், உருட்டுக் கட்டையுடனே சுத்திக் கொண்டிருக்கிற ஒரு அமைச்சர், எல்லாவற்றுக்கும் மேலாக போதைப் பவுடர் அமைச்சர். இப்படி மொத்த கேபினெட்டுமே ஒரு ஜோக்கர் கூட்டமாக இன்றைக்கு தமிழ்நாட்டில் அமைந்திருக்கிறது” என்று குற்றம் சாட்டி இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி. இதற்குப் பதில் சொல்லத் திராணி இருக்கிறதா முதலமைச்சர் விஜய்க்கு?

சொந்தக் கட்சிக்காரரை, “அவனைத் தூக்கி வைத்து ஜட்டியோட வைத்து அடித்தே கொன்னுடுவேன்” என்று மிரட்டுகிறார் சமூகநலத் துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி. ‘என்னோட வீடியோ இருக்குன்னு மிரட்டுகிறார்கள்’ என்று அவரே பேட்டி தருகிறார். மிரட்டுவது யார்? அவரது கட்சிக்காரர்கள் தானே? இவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை உண்டா? விஜய் ரசிகையை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய குற்றச்சாட்டில் சிக்கி இருக்கும் ஸ்ரீவைகுண்டம் சரவணன்மீது இன்று வரை நடவடிக்கை இல்லை. அந்த ரசிகையை கட்சியை விட்டு நீக்கிவிட்டார்கள். அரசு வழக்கறிஞர் நியமனத்தில் பல லட்சம் லஞ்சம் என்று சொன்ன த.வெ.க. உறுப்பினர் ஞானசௌந்தரியைக் கட்சியை விட்டு நீக்கிவிட்டார்கள். இவர் யாரைக் குற்றம் சாட்டினாரோ அவர்கள் மீது நடவடிக்கை இல்லை. இத்தகைய துப்புக் கெட்ட ஆட்சிக்கு தூய ஆட்சி என்று பெயர்.

ஆனால் தஞ்சாவூரில் ஆர்ப்பாட்டம் நடத்திய அடுத்த நாளே எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்கிறார்கள். அவர் ஆபாசமாகப் பேசிவிட்டார் என்ற அவதூறை அவர்களே கிளப்பி அசிங்கப்படுத்த நினைத்தார்கள். அதில் அவர்களே அசிங்கப்பட்டு நிற்கிறார்கள். தனது தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்டார்கள்.

**ஆபாசமாகவும் அசிங்கமாகவும் கெட்ட வார்த்தைகளைச் சரளமாக பயன்படுத்துவதிலும் கை தேர்ந்தவர் முதலமைச்சர் விஜய் தான். அவர் மீது எத்தனை வழக்குகள் போடுவது?**

**முதலமைச்சர் விஜய்யின் மனைவி சங்கீதா மணவிலக்கு கேட்டு செங்கல்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். சங்கீதாவை அசிங்கப்படுத்தியது விஜய் ரசிகர்கள் தான். இவர்கள் மீது எத்தனை லட்சம் வழக்குகள் போடுவது? தனது மனைவிமீது கொச்சையான அவதூறு கிளப்பியவர்களைத் தடுக்க துப்பு இல்லை. உதயநிதி மீது வழக்கு போடத் துடிப்பதற்கு வெட்கமாக இல்லையா?**

கட்டிய மனைவியை ‘வொர்த் இல்லை’ என்று சொன்னவருக்கு ‘வொர்த்’ யார் என்பதை ஊருக்குக் காட்டும் நாளாக ஆகஸ்ட் 4 அமைந்துவிட்டது.

## த.வெ.க. அரசின் கையாலாகாத்தனத்தை உதயநிதி ஸ்டாலின் அம்பலப்படுத்தியதால் கைது:

# ஆணவம், அழிவுக்கு வழிவகுக்கும்; தொடர் ஆணவம் அழிவை விரைவுபடுத்தும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!



**சென்னை, ஆக.6 –**

**சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கைது என்பது ஆணவம், அழிவுக்கு வழிவகுக்கும்; தொடர்ச்சியான ஆணவம், அழிவை விரைவுபடுத்தும் என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

காவிரியில் தமிழ்நாட்டுக்கான உரிமையை நிலைநாட்ட துப்பு இல்லாத, மேகதாது அணையைத் தடுக்க முதுகெலும்பு இல்லாத த.வெ.க. அரசின் அலட்சிய ஆணவப் போக்கைக் கண்டித்து தஞ்சையில் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தின் எழுச்சி ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் கொந்தளிப்பை உணர்த்துவதாக அமைந்திருந்தது.

### எதிர்க்கட்சித் தலைவரின் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள்!

கழக உடன்பிறப்புகளோடு உழவர் பெருமக்களும் பொதுமக்களும் பங்கெடுத்து தங்களது உணர்ச்சியை வெளிப்படுத்தினார்கள். கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, த.வெ.க. அரசின் கையாலாகாத்தனத்தை மிகக்கடுமையாக அம்பலப்படுத்தி விமர்சித்தார்.

“நிர்வாகத் திறனற்ற டம்மி முதலமைச்சரால் காவிரி நீரைக் கொண்டுவர முடியவுமில்லை, மேகதாது அணையைத் தடுக்க பேசவும் முடியவில்லை, விவசாயிகள் வேதனையில் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறார்கள், ஆனால் அமைச்சர்களோ முதலமைச்சர் நடித்த படத்தை பார்த்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள், ஜோக்கர் அமைச்சரவை தமிழ்நாட்டில் அமைந்திருக்கிறது” என்று அடுக்கடுக்கான குற்றச்சாட்டு களை எதிர்க்கட்சித் தலைவர் வைத்தார். இதற்கு இதுவரை ஆட்சியாளர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

### பிரச்சினையை திசை திருப்ப உதயநிதியை கைது செய்துள்ளனர்!

காவிரி பிரச்சினையில் அரசின் தோல்வி வெளிச்சத்துக்கு வந்துவிட்டதை மறைக்கும் வகையில், பிரச்சினையையே திசை திருப்பும் வகையில் இன்று காலையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி வீட்டுக்கு வந்த போலீஸ் படை அவரை அராஜகமாக கைது செய்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் என்பதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் அவரைக் கைது செய்து தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றுள்ளது த.வெ.க. அரசு. பல்வேறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்திருப்பதன் மூலமாக உதயநிதியை மிரட்டப் பார்க்கிறார்கள்.

நாளை சட்டமன்றம் கூட இருக்கிறது. நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய இருக்கிறார்கள். அப்போது கேபினெட் தகுதி பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் அவையில் இருக்க வேண்டும். ஆனால் இருக்கக் கூடாது என்று நினைத்து இந்த நடவடிக்கையைத் தொடங்கி இருக்கிறார்கள்.

### உச்சநீதிமன்றத்தின் உத்தரவு பாசிச அரசுக்கு விழுந்த அடி!

நாடு முழுவதும் கழகத் தொண்டர்களும், பொதுமக்களும் காட்டிய எதிர்ப்புக்குப் பிறகு, ‘கைது செய்யும் எண்ணம் இல்லை, விசாரணை முடிந்ததும் விடுவித்துவிடுவோம்’ என்று நீதிமன்றத்தில் த.வெ.க. அரசு வழக்கறிஞர் சொல்லி இருக்கிறார். விசாரணை நடத்துவதுதான் நோக்கம் என்றால் சென்னையிலேயே வைத்து நடத்தி இருக்கலாமே? எதற்காக தஞ்சாவூர் அழைத்துச் செல்ல வேண்டும்? எதற்கு ஜாமீனில் விடுவிக்க முடியாத பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்? மக்கள் எதிர்ப்பால் பின் வாங்கியது தெரியாமல் பூசி மெழுகுகிறது அரசு. ‘உதயநிதியை இன்றே விடுதலை செய்ய வேண்டும்’ என்று சென்னை உயர்நீதி மன்றம் வழங்கி இருக்கும் உத்தரவு, த.வெ.க. வின் பாசிசத் தன்மைக்கு விழுந்த அடி!

ஆட்சிக்கு வந்தது முதல் தன்னையும் தனது அமைச்சர்களையும், ஆட்சியையும் விமர்சிப்பவர்களைக் கைது செய்யும் ஒரே வேலையைத் தான் முதலமைச்சர் விஜய் பார்த்து வருகிறார். ட்வீட் போட்டால், வீடியோ பேசினால் கைது செய்து வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், மார்க்கண்டேயன் ஆகியோர் மீதும் கைது நடவடிக்கை பாய்ந்தது. நீட் தேர்வுக்கு எதிராக மாணவர்கள், இளைஞர்களைப் போராட விடவில்லை. போராட்டம் நடத்தியவர்கள் மீது அராஜகமான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.

### கைதை கட்சித் தலைவர்கள் கண்டித்ததற்கு நன்றி!

சென்னை மெரினா கடற்கரையே பூட்டி வைக்கப்பட்டது பாசிசத்தின் உச்சம். விவசாயிகள் தன்னெழுச்சியாகப் போராடியதை எதிர்க்கட்சிகளின் தூண்டுதலின் பேரில் போரடியதாகச் சொல்லப்பட்டது. நீட் தேர்வு எதிர்ப்பு பரப்புரை செய்யச் சென்ற திராவிடர் கழக வாகனப் பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகத்தான் விவசாயிகளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்திய, அதில் பங்கெடுத்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி மீது கைது நடவடிக்கையைப் பாய்ச்சியது த.வெ.க. அரசு.

இதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ள அரசியல் கட்சித் தலைவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சில தலைவர்கள், உண்மை என்னவென்று தெரிந்து கொள்ளாமல் உதயநிதிக்குக் கண்டனம் தெரிவித்திருப்பது வருந்தத்தக்கது. உதயநிதி தனது உரையில் ஆபாசமாக ஏதும் பேசவில்லை. யாரையும் குறிப்பிட வில்லை. அவர் பேசாத ஒன்றை பேசியதாகச் சிலர் பரப்பியதைச் சரிபார்க்காமல் அரசியல் தலைவர்கள் சிலர் உதயநிதியைக் கண்டிப்பது பிரச்சினையை திசைதிருப்புவது ஆகும். உதயநிதி தவறுதலாகப் பேசுகிறவர் அல்ல. அப்படியே தவறுதலாகப் பேசினாலும், உடனடியாக மன்னிப்பு கேட்கும் இயல்புடையவர்.

### ரீல்ஸ் முதலமைச்சர் பொறுப்புடன் செயல்பட வேண்டும்!

ஆட்சிக்கு வந்தது முதல் வாக்குறுதிகளை நிறைவேற்ற நினைக்காமல், ரீல்ஸ் கிரியேட்டராக மட்டுமே வலம் வரும் முதலமைச்சர் விஜய், தனது பொறுப்பை உணர்ந்து இனியாவது செயல்பட வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகக் கைது செய்துள்ள கழக உடன்பிறப்புகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்!

ஆணவம், அழிவுக்கு வழிவகுக்கும்; தொடர்ச்சியான ஆணவம், அழிவை விரைவுபடுத்தும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### மக்கள் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கும்

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது - அரசின் அப்பட்டமான அடக்குமுறை!

## இந்திய குடியரசுக் கட்சி மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் கடும் கண்டனம்!

*சென்னை, ஆக.6-*

*மக்கள் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் கைது செய்தது த.வெ.க. அரசின் அப்பட்டமான அடக்குமுறை என இந்திய குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-*



*மக்களாட்சி தத்துவத்தின் வழியில், மக்கள் நலன் சார்ந்த பிரச்சனைகளுக்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவும் ஜனநாயக முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் காவல்துறை மூலம் கைது செய்திருப்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.*

*அரசின் இந்த அப்பட்டமான அடக்குமுறை நடவடிக்கையை இந்திய குடியரசு கட்சியின் சார்பில் மிகக் கடுமையாகக் கண்டிக்கிறேன். ஜனநாயக நாட்டின் முதுகெலும்பாக விளங்குவது எதிர்க்கட்சிகளின் குரல்தான். அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளின் படி, மக்கள் சார்ந்த பிரச்சனைகளில் கண்டனத்தைப் பதிவு செய்வதும், போராட்டம் நடத்துவதும் எதிர்க்கட்சிகளின் ஜனநாயகக் கடமையாகும். அதை அடக்குமுறையின் மூலம் நசுக்க நினைப்பது மக்களாட்சி நெறிமுறைகளுக்கே எதிரானது.*

*மாநிலத்தின் உரிமைகளுக்காகவும், மக்களின் நலனுக்காகவும் தொடர்ந்து களத்தில் நின்று குரல் கொடுத்து வரும் எதிர்க்கட்சித் தலைவரின் குரலை முடக்க நினைக்கும் எந்தவொரு முயற்சியும் ஒரு போதும் வெற்றி பெறாது. அடக்குமுறைகளை ஏவி எதிர்க்கட்சிகளின் ஜனநாயகப் போராட்டங்களை ஒடுக்கிவிடலாம் என்று அரசு நினைப்பது முற்றிலும் தவறான அணுகுமுறையாகும்.*

*எனவே, கைது செய்யப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று இந்திய குடியரசு கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.*

*இவ்வாறு இந்திய குடியரசு கட்சி மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன் கூறியுள்ளார்.*

---

### உதயநிதி ஸ்டாலின் கைது: நீதிமன்ற அறிவுரையைப் புறக்கணித்து –

# நாட்டின் அமைதியைக் கெடுக்கும் த.வெ.க. அரசின் செயல் மிகுந்த கண்டனத்திற்குரியது!

## திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அறிக்கை!

***சென்னை, ஆக.6-***

***சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ள திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன், ‘ ‘நீதிமன்ற அறிவுரையைப் புறக்கணித்ததோடு, நாட்டின் அமைதியைக் கெடுக்கும் இந்தச் செயலை த.வெ.க. அரசு மேற்கொண்டிருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது” என்று குறிப்பிட்டுள்ளார்.***

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-*



*திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை கைது செய்யப்பட்டிருக்கிறார்.*

*நேற்று முன்தினம் தஞ்சையில் நடைபெற்ற விவசாயிகளுக்கான ஆர்ப்பாட்டத்தில், அவர் பேசிய ஒரு பேச்சை அடிப்படையாக வைத்து, அவர் கைது செய்யப்பட்டு இருக்கிறார். அங்கு, தான் பேசாத செய்திகளை அரசு திரித்துச் சொல்வதாக உதயநிதியின் தரப்பில் கூறப்பட்டுள்ளது.*

*பகல் 12 மணி வரையில் கைது செய்ய வேண்டாம் என்று உயர் நீதிமன்ற நீதிபதி அறிவுறுத்திய பின்பும், காலை 11 மணிக்கு முன்பே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இரு சமூகத்தினருக்கு இடையே கலவரத்தை உருவாக்க முயன்றதாகவும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழுமாக, ஒன்பது பிரிவுகளில் உதயநிதியின் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாகக் காவலிதுறையினர் கூறுகின்றனர்.*

*இப்பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ஒருவருக்கு. 5 ஆண்டு காலம் வரையில் சிறைத்தண்டனை வழங்கலாம் என்று வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.*

*எனவே இது அரசின் அராஜகமான போக்காகவும், அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கையாகவும் உள்ளது. நாளை முதல் தொடங்கவிருக்கும் சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரைக் கலந்துகொள்ள விடாமல் தடுக்கும் நடவடிக்கையாகவும் இதனைப் பார்க்கலாம்.*

*நீதிமன்ற அறிவுரையைப் புறக்கணித்ததோடு, நாட்டில் அமைதியையும் கெடுக்கும் இந்தச் செயலை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு இருப்பது மிகுந்த கண்டனத்திற்கு உரியது.*

*தமிழ்நாட்டின் இன்றைய சூழல், அறிவிக்கப்படாத அவசர நிலைக் காலம்போல இருக்கிறது. தமிழ்நாடு அரசின் இப்போக்கை திராவிட இயக்கத் தமிழர் பேரவை, மிக மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது.*

*இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*